விஷேட
பதிப்பு
11-07-1990

# முரசொலி

விலை
ரூபா 2 -00

● நேற்று இரவு கரும்புலிகளின் வெற்றித்தாக்குதல்

# கடற்படை யுத்தக் கப்பல்

# வல்வைகடலில்மூழ்கடிப்பு

(உடுப்பிட்டி)

வல்வைக் கடலில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாககுதலால் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு சொந்தமான யுத்தக் கப்பலொன்று முழுமையாக மூழ்கடிக்கப்பட்டது.

நேற்று இரவு பத்துமணியளவில் வல்வைசுங்கப் பகுதிக்கு எதிரே கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலே இத்தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்டது.

இந்த வெற்றிகரத்தாக்குதலில் மூன்று கரும்புலிகள் வீர மரணம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெடிகுண்டு நிரப்பப்பட்ட படகுடன் நான்கு பாதுகாப்பு படகுகளும் சென்றே இத்தாக்குதலை மேற்கொண்டன.

தாக்குதலின் பின்னர் அந்தப் பாதுகாப்புப்படகுகள் நான்கும் கரைதிரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின்போது மூழ்கடிக்கப்பட்ட கப்பலுக்கு அருகில் பாதுகாப்புக்கு நின்ற

— மறு பக்கம் பார்க்க

## ★ மூன்று கரும்புலிகள் ★ வீர மரணம்

நேற்று இரவு வல்வை கடலில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலில் மூன்று கரும்புலிகள் வீரமரணமடைந்தனர். மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத் (வல்வை) கப்டன் கெலினஸ் (மன்னார்) ஆகிய மூன்று கரும்புலிகளே இத்தாக்குதலில் வீர மரணமடைந்தனர். இவர்களின் வீர மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று காலை முதல் வடமராட்சிப் பகுதியில் புரட்சிக்கீதங்கள் ஒலிபரப்பட்டு வருகின்றது. (கி)

## நேற்று இரவு தீவுப்பகுதியை நோக்கி கடற்படை பெரும் ஷெல் தாக்குதல்

நேற்றிரவு காரைநகர்க் கடற் பகுதியிலிருந்து தொடர்ச்சியாகப் படுபயங்கரமான சத்தத்துடன் கூடிய 'ஷெல்' வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இரவு சுமார் பத்து மணியளவில் ஆரம்பமான இந்த எதிர்பாராத கடுந்தாக்குதலால் வெகுதூரம் வரை அதிர்வொலி கேட்டவண்ணமிருந்தது.

நேற்றிரவு வல்வைக்கடலில் இடம்பெற்ற கரும்புலிகளின் கடற்படை ரோந்துக் கப்பலின் மீதான வெற்றிகரமான தாக்குதலின் எதிரொலியாகவே, இந்தச் 'ஷெல்' வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கலாமெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை நேற்று இரவு பதினொரு மணிமுதல் காரைநகர்க் கடற்பகுதியில் ஹெலிகப்டர்களின் ரோந்து அதிகரித்துக் காணப்பட்டது. (கி)

## மூழ்கிய படையினரை மீட்க ஹெலிகப்டர்கள் தேடுதல்

நேற்று இரவு வல்வைக்கடலில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படைக்கப்பலைத் தேடும் முயற்சியில் ஸ்ரீ லங்காப்படையினர் நேற்று அதிகாலை முதல் ஈடுபட்டுவருகின்றனர்.

இன்று அதிகாலை தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு வந்த விமானப்படைக் ஹெலிகப்டர்கள் சில தாழப்பறந்து தேடும் நடவடிக்கைகளில் ஈடு

— மறுபக்கம் பார்க்க

### பல்கலைக்கழகத்தில் யோகி:

## 'போராளி மண்ணையும் ஆயுதத்தையும்நேசிப்பவன் அவற்றை இழக்க அவன் விரும்பவே மாட்டான்'

ஒரு போராளி ஏட்டுக் கல்வியைத் துறந்தாலும் நாட்டிற்காக தனது மண்ணிற்காக தன்னைத் தந்து பரந்துபட்ட அறிவும் அனுபவமும் மிக்கவனாகத் திகழ்கின்றான்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகததில் இடம்பெற்ற போர்க்காலப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலி மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

நாம் உங்களை போராளி ஆகுங்கள் எனக் கூறவில்லை. ஏதோ ஒரு வகையில் உங்கள் பங்ககளிப்பை செலுத்துங்கள் ஒரு போராளிக்கு உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். அவனை உங்கள் சகோதரனாக கருதுங்கள் — இது உங்கள் பங்களிப்பை எமக்கு உணர்த்தும்.

ஓர் போராளி மேன்மையானவன். அவன் மக்களின் பாதுகாப்பிற்காகவே ஆயுதம் ஏந்தி நிற்கின்றான். எமக்கு ஆயுதம் உயிருக்கு சமமானது. எனவே ஆயுத இழப்பு என்பது கௌரவக்

—மறு பக்கம் பார்க்க

## 'தாயை நோக்கி ஓடும் குஞ்சுகள்'

பருந்து - கோழிக் கதையை நினைவுக்குக் கொண்டு வரும் வகையில் காங்கேசன்துறையில் இலங்கை கடற்படையினரின் நடமாட்டம் காணப்படுகின்றது. காங்கேசன் கடலில் தரித்துள்ள யுத்தக்கப்பலைச் சுற்றி சிலகடற்படை பீரங்கிப் படகுகள் அணிவகுத்து நிற்கின்றன. தாய்க்கோழியை விட்டு பிரிந்து வரும் குஞ்சுகளைப் போல் அவ்வப் போது கரையை அண்டிவரும் இந்தப் படகுகள் போராளிகள் தாக்குதலைத் தொடர்ந்ததும் உடனேயே திரும்பிச் சென்று தாய்க் கப்பலின் அருகே அதன் பாதுகாப்புடன் இணைந்து கொள்கின்றன. இப்பகுதி மக்கள் கரையில் நின்று அடிக்கடி இக்காட்சியைப் பார்த்து 'பருந்து -கோழிக் கதையை' நினைவு படுத்திக் கொள்கின்றனர் (48 கி)

## ★ பூநகரி பாதை சேவை நிறுத்தம்
## ★ ஆனையிறவு தடை நீக்கம்

# பயணிகளை பணயம் வைக்க இராணுவம் புதிய திட்டம்?

(நாவற்குழி)

சிறீலங்கா இராணுவம் ஆனையிறவைச் சுற்றியுள்ள பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

அதன் ஆரம்ப நடவடிக்கையாக நேற்று முன்தினம் நள்ளிரவு அவ்ரோ விமானத்திலிருந்து அப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

எச்சரிக்கை என்ற தலையங்கத்தில் போடப்பட்ட அந்தத் துண்டுப் பிரசுரத்தில்

சுண்டிக்குளம் வீதியை அடுத்த பகுதிகளிலும், சங்குப்பிட்டி படகுப் பயணப் பாதையை அடுத்த பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாகவும், அதனால் அந்த இரு பாதையையும் மறு அறிவித்தல் வரை பயன்படுத்த வேண்டாமெனவும் ஆனையிறவு ஊடாக பயணம்செய்ய அனுமதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கருதியே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையும், எச்சரிக்கையும் விடுக்கப்படுவதாகவும்


— மறுபக்கம் பார்க்க

## இராணுவ முகாம்

ஏறாவூரில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் தெரிவித்திருக்கிறார். (கி)

## கடல் எல்லை கவனிப்பு

இலங்கை — இந்திய கடல் எல்லை பற்றி இந்திய கடற்படை கவனித்து வருவதாக நேற்று மத்திய அரசின் உயர் அதிகாரி ஒருவர் தகவல்வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ)




### மானிப்பாய் வைத்தியசாலையில்

# நோயாளர் அதிகரிப்பு விடுதிகளில் இடமில்லை

(சங்கானை)

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் தொகை அதிகரித்து வருகின்றது.

அவசர நோயாளர்கள் மாத்திரமே உள் நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டு வருகின்றபோதிலும் இங்கு பலத்த இடநெருக்கடி நிலவுகின்றது.

கட்டில் வசதிகள் எதுவுமற்ற நிலையில் பல கடுமையான நோயாளர்கள் பாயில் படுத்திருந்து சிகிச்சை பெற வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலை ஊழியர்கள் மிகுந்த கடமையுணர்ச்சியுடன் சிரமத்தின் மத்தியில் சேவையாற்றி வருவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் (சர்வதேச) முதலுதவிப் படையின் தொண்டர்களும் இவ் வைத்திய சாலையில் இரவு பகலாக ஊழியர்களுடன் சேர்ந்து சேவையாற்றி வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் வார்ட்டுக்களில் சிகிச்சை பெறும் நோயாளரை பார்வையிடும் நேரங்கள் காலை 6 மணி தொடக்கம் 7மணிவரையும் என்றும், நண்பகல் 12 மணி தொடக்கம் இரண்டு மணிவரையும் என்றும், பிற்பகல் நாலுமணி தொடக்கம் மாலை ஆறு மணி வரையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் நோயாளரை பார்வையிட எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (13-கி)

## தற்காப்புப் பயிற்சிக்கென துணைப்படை நிறுவப்படும்

(மட்டுவில்)

''மாணவர்கள் தமது உயிரையும் உரிமைகளையும்காக்க களத்தில் குதிக்க வேண்டிய காலகட்டம் இது'' இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெற்ற மாணவர் அமைப்பு கருத்தரங்கில் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் எஸ்.பி.கே பாப்பா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். உண்மையில் தமிழ்க் குடிமகன்என்று கூறுகின்ற ஒவ்வொருவரும் இக்கட்டத்திலாவது களத்தில் இறங்கி எம்முடன் இணைந்து எமது தாயகத்தை மீட்டிட முன்வர வேண்டும்.

கல்வி கற்கும் எம்மால் போராட்டத்திற்கு எவ்வகையில் உதவ முடியும் என மாணவர்கள் கேட்பது வேடிக்கையானது கல்விகற்கும் போது போராட முடியாது என்பது ஒருசாட்டு எனக் கூறினார்.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி பேசுகையில், மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தற்காப்புப் பயிற்சிகளை வழங்க எம்மால் துணைப்படை ஒன்று அமைக்கப்படவுள்ளது அதில் கலந்து எமது போராட்டத்திற்கு ஒவ்வொரு தமிழ் மகனும்துணை செய்ய வேண்டும்என்றார்.

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ரஞ்சன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (ப-4கி

## தமிழ் புகையிரத காவலர் காடையரால் வெட்டிக் கொலை

கல்லோயாவில் வைத்து தமிழ் புகையிரத காவலர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த மாணிக்கவாசகர் யோகிராசா என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் திருமலையில் புகையிரத பாதுகாவலராகக் கடமையாற்றி வந்தார்.

கல்லோயாவில் புகையிரத நிலையத்தில்வைத்து சிங்களக் காடையர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இவர் புகையிரத நிலையத்திலிருந்து சிறிது யார் தூரத்தில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றிய தகவல் நேற்று முன்தினம் இவரது குடும்பத்திற்கு கிடைத்துள்ளது. (13கி)

### தொடர் ஷெல் தாக்குதலினால்

## வயாவிளான் மகாவித்தியாலய கட்டிடம், தளபாடம் சேதம்

பலாலி இராணுவத்தினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலினால் வயாவிளான் மத்திய மாகவித்தியாலய கட்டிடங்களுக்கும், தளபாடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஷெல் தாக்குதலினால் பாடசாலைக் கட்டிடங்களில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த ஒரு ஏக்கர் தோட்டமும் முற்றாக அழிந்துள்ளது.

இப்பகுதியில் அடிக்கடி நிகழும் ஆகாயத் தாக்குதலினால் பாடசாலையில் உள்ள தளபாடங்களை அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

### முல்லை. முகாம்களில்

## அகதிச் சிறுவர்களுக்கு தொற்று நோய்கள்

முல்லைத்தீவுப்பகுதியில் அமைந்துள்ள மட்டுநகர், திருமலை அகதிகளுக்கான முகாம்களில் தங்கியுள்ள பல குழந்தைகள் தொற்று நோய்களினால் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வயிற்றோட்டம் போன்ற உணவுக்கால்வாய்த் தொகுதி நோய்களும், நிமோனியா போன்ற சுவாசத்தொகுதி நோய்களும், சொறி சிரங்கு போன்ற தோல் நோய்களும் அதிகளவில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருந்துவசதிகள், சுகாதார வசதிகள் இல்லாத காரணத்தினாலே இந்தநோய்கள் வேகமாகப் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது (03-ஸ்ரீ)

## மூன்று இலட்சம் மக்கள் முகாம்களில் உள்ளனர்

யாழ்மாவட்டத்தில் அகதிகளாக உள்ளோரின் எண்ணிக்கை மூன்றுலட்சத்தை அண்மிப்பதாக நேற்றைய பதிவுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

நேற்றுமுன் தினம் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஓராயிரம் மக்கள் யாழ்மாவட்டத்தில் அகதிகளாக தங்கியுள்ளார்கள்.

இவர்களில் திருமலை, மட்டக்களப்பு போன்ற வெளி மாவட்டங்களில் இருந்து 9872 குடும்பங்களைச் சேர்ந்த நாற்பத்தொன்பதாயிரத்து முந்நூற்றி அறுபது மக்கள் அகதிகளாக இங்குதங்கியுள்ளார்கள். (03)

## பனையின் மகத்துவம் இப்போது இவர்களுக்கும் புரிகிறது

நயினாதீவில் இராணுவத்தினரால் பெருந்தொகையாகப் பனைமரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. வெட்டப்பட்ட மரங்கள் கடற்படையினரின் படகுகள் மூலமாக காரைநகரில் அமைந்திருக்கும் கடற்படை முகாமுக்கு படையினரால்கொண்டு செல்லப்படுகிறது.

அங்கு அவர்களின் பாதுகாப்பு அரண்களுக்குப் இவை பெருமளவில் பயன் படுத்தப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (23)

## உணவுப்பெர்மிட் இருந்தும் பெறமுடியாதநிலை இவர்களுக்கு

இடம்பெயர்ந்தவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் பெர்மிட்டுகளுக்கு அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களை கூட்டுறவுச்சங்கங்களில் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு பதிலாக சோப்பு, பவுடர், ரயர், ரியூப் போன்ற பொருட்களே நிவாரணப் பொருட்களாகக் கிடைக்கின்றன.

இக்காலகட்டத்தில் அரிசி, மா, சீனி போன்றன தேவைப்படும் நேரத்தில் அழகுசாதனப் பொருட்களை வாங்கி என்ன செய்வதெனப் பாதிக்கப்பட்டவர்கள் கேட்கிறார்கள் (68கி)

### பயணிகள்

அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவம் பொதுமக்களைப் பணயமாக வைத்தும், பொதுமக்களுடன் தாங்களும் ஆனையிறவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளிலிருந்தும் வெளியேறுவதற்கு ஆடும் நாடகமே இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரால் போடப்பட்ட சிவப்பு நிறத்தில் அச்சிடப்பட்ட இப்பிரசுரம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. (ப-5கி)

### கடற்படை

இரு கடற்படை பீரங்கிப் படகுகள் கரும்புலிகளின் தாக்குதற் பிரிவினால் விரட்டியடிக்கப்பட்டன.

சமீபகாலத்தில் நடந்த வெற்றிகரத் தாக்குதலாக இந்த கடற்படைக் கப்பல் தாக்குதல்சம்பவம் கருதப்படுகின்றது.

கப்பல் முழுமையாக மூழ்கடிக்கப்பட்டதினால் பல கடற்படையினர் இறந்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

வல்வைக்கடலில் நங்கூரமிடப்பட்டு நின்ற கடற்படை அணிக்கு தலைமை தாங்கிய தாய்க்கப்பலே மூழ்கடிக்கப்பட்டதாக பிந்திக்கிடைத்த தகவலொன்று தெரிவிக்கின்றது.

இது பற்றிய மேலும் விபரங்கள் நாளைய முரசொலியில் வெளியாகும்

## திருமலையில் இருந்து கைதடிக்கு

(சுண்டுக்குளி)

திருகோணமலைப் பகுதியில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் மிகவும் பாதிப்படைந்து வீடு வாசல்களை இழந்து கால்நடையாகவும், படகு மூலமாகவும் முல்லைத்தீவு வழியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அகதிகள் குழுவொன்று கைதடி இரட்சணிய சேனை மண்டபத்தில் தங்கியிருக்கிறது.

கைதடிப் பகுதியைச் சேர்ந்த சன சமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் அவர்களுக்கு வேண்டிய உணவுகளையும், உடைகளையும் வழங்கிவருகின்றன. (37-கி)

### மூழ்கிய ..

பட்டன,

கடற்படைப் படகுகள் சிலவும்சம்பவம் நடந்த இடத்தை நோக்கி இன்று காலை விரைந்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கடும் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் உடன் தெரியவில்லை.

எதிர்பாராத இத்தாக்குதலினால்அதிர்ச்சியுற்றகடற்படையினர் தாக்குதலுக்குஉள்ளான தமது சகாக்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

## சங்குப்பிட்டி கடலில் அனாதரவான படகு

சங்குப்பிட்டி கடற்கரையோரத்தில் அனாதரவாக வள்ளம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இவ்வள்ளத்தில் அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப்பொருள் சிதறுண்ட நிலையில் காணப்படுகின்றது.

இவ்வள்ளம்இப்போதுபாதை சேவையினரால் கரையோரத்தில் கட்டப்பட்டுள்ளது

படகில் வந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவித தகவலும் இல்லை. (68-கி)

## மருந்தகம் மூடப்பட்டது

(சங்கானை)

பலாலி அரசினர் மத்திய மருந்தகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்த மருந்தகத்தின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். செல்வநாயகம் இடம் பெயர்ந்து தற்போது சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றார். (13-கி)

### போராளி

குறைவே.

ஓர் போராளி தனது ஆயுதத்தை நேசிக்கின்றான், பூஜிக்கின்றான், அதை அவனது ஓர் அங்கமாகவே கருதுகின்றான் எனவே யாபேரும் ஏதோ ஒருவகையில் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டால் மண்மீட்பு என்பதும் வெற்றி என்பதும் உறுதியான தொன்றாகும் என அவர் இங்கு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டார். (64 கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 11-7-90அச்சிட்டு வெளியிடப்பெற்றது,